அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்

ந.க.எண். 127311/எச்1/2019 நாள் : 12.08. 2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச் 2020 – விடைத்தாளின் நகல் மற்றும் மறுகூட்டலுக்கான விண்ணப்பத் தொகை – ஆன்–லைனில் விண்ணப்பித்து, அதற்கான தொகையினை செலுத்த முடியாத பள்ளிகள் கேட்பு வரைவோலை எடுத்து செலுத்த தெரிவித்தல் – குறித்த அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.22.07.2020.

-----

மார்ச் 2020, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்கள் மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை (+1 arrear subjects) மார்ச் 2020 பருவத்தில் எழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் ஆகியவை, **16.07.2020** அன்று வெளியிடப்பட்டது. இத்தேர்வர்களுள், விடைத்தாள் நகல் கோரியோ அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரியோ விண்ணப்பிக்க விரும்புவோர் **24.07.2020** முதல் **30.07.2020** வரையிலான நாட்களில் விண்ணப்பிக்கலாம் எனவும், பின்னர் தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணத் தொகையினை +1 arrear / +2 தேர்வுக்கான விடைத்தாள் நகல் விண்ணப்ப கட்டணத் தொகையை தனியாகவும், மறுகூட்டல்–I விண்ணப்பக் கட்டணத் தொகையை தனியாகவும் 31.07.2020 அன்று இணையதளத்தின் வாயிலாக செலுத்த வேண்டும் எனவும் பார்வையில் காணும் கடிதத்தின் வாயிலாக அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி, 31.07.2020 அன்று இணையதளத்தின் வாயிலாக விடைத்தாள் நகல் / மறுகூட்டலுக்கான கட்டணத் தொகையினை செலுத்த இயலாத மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்களை அனைத்து உதவி இயக்குநர்களும் தங்கள் அலுவலக USER-ID மற்றும் Password-ன் மூலம் அறிந்து, அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் விடைத்தாள் நகலுக்குரிய கட்டணத் தொகையை தனியாகவும், விடைத்தாள் மறுகூட்டலுக்குரிய கட்டணத் தொகை தனியாகவும் Director of Government Examinations, Chennai-6 என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக எடுத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 14.08.2020–க்குள் ஒப்படைக்குமாறு தெரிவித்திட வேண்டும்.

...2...

பின்னர், உதவி இயக்குநர்கள் அப்பள்ளிகளிலிருந்து தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட கேட்பு வரைவோலைகளின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, விண்ணப்பக் கட்டண விவரங்கள் (Print out copy) மற்றும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட கேட்பு வரைவோலைகள் ஆகியவற்றினை 17.08.2020–க்குள் இவ்வலுவலக துணை இயக்குநர் (பொது) பொ அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–

இயக்குநர்

<u>நகல்</u>

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

} தகவலுக்காக